செ.கு. எண்: 57 நாள்: 18.06.2011

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்</u>

<u>அறிக்கை – 18.6.2011</u>

திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து** அமராவதி பழைய வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் உள்ள பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுமாறு திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, அமராவதி அணையிலிருந்து அமராவதி பழைய வாய்க்கால் பாசன அமைப்பின் கீழுள்ள பாசன சாகுபடிக்காக **19.6.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் திருப்பூர் மாவட்டம், உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டம், பழைய வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் உள்ள **7,520 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், **கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து** வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, முதல்போக பாசனத்திற்காக **19.6.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் **9,012 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், **பாபநாசம், சேர்வலார் மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து** கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய் மற்றும் திருநெல்வேலி கால்வாய் பாசன அமைப்புகளின் கீழ் கார் சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பாபநாசம், சேர்வலார், மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய் மற்றும் திருநெல்வேலி கால்வாய் பாசன அமைப்புகளின் கீழுள்ள பாசன நிலங்களின் கார் சாகுபடிக்காக **19.6.2011 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை வட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில், கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய் மற்றும் திருநெல்வேலி கால்வாய் பாசன அமைப்புகளின் கீழ் உள்ள **20,703 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9